அதற்குத் தலைவராக இருக்கிறார். நியமிக்கப்பட்ட நான்-அபிசியல் மெம்பர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே நேரடியாக கவனத்தைச் செலுத்த முடிகிறது. வருமானத்தை அதிகரிக்க முடியவில்லையென்றால் அரசாங்கம் அங்கே சில பணிகளுக்காக மானியங்கள் கொடுக்கிறது. அவைகள் எல்லாம் அந்த நகரியத்திற்குப் போய்ச் சேரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கண்காணிக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிற காரணத்தினால் நகரியம் பாதுகாக்கப்படுகிற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்தால் அவரவர்கள் கட்சி சார்பில் அந்தப் பணிகளைச் செய்யக்கூடிய நிலைமை இருக்கும். இப்போது பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்கும் நகரத்தை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்வதற்கும் நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. முத்தையா : கொடைக்கானல் நகரியமாக மாற்றப்பட்டதற்குப் பிறகு இவ்வளவு காலமாக அதன் வளர்ச்சியில் எந்த முன்னேற்றமும் இல்லையென்றாலும் அண்மையிலே ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருக்கிறதே அது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தப் பணிகள் பரிசீலனையில் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை மாநகர வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியுதவி

*வினா எண் 389— **திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி தமிழ்நாடு அரசை மாநகர வளர்ச்சிப்பணிகளுக்கு நிதியுதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை கேட்டது ?

(இ) அரசு கொடுத்த தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூ. 20,73·40 இலட்சங்கள்.

(இ) ரூ. 500 இலட்சங்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மாநகராட்சி 20 கோடி ரூபாய் கேட்டதாகவும், அரசு 5 கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். இன்றையதினம் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது என்னென்ன பணிகளுக்காக ? மாநகரில் இன்றைய தினம் பாதை வசதி சரியாக இல்லை. 'ட்ரெயினேஜில்' மூடிகள் இல்லாமல் இருப்பதால் அதிலே குழந்தைகள விழுந்து இறந்துவிடுகின்றன. அதையெல்லாம் சீர் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, என்னென்ன பணிகளுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியின் முக்கியமான சாலைகளை பராமரிப்பதற்காக 3 கோடி ரூபாய் ; அதைப்போல புதிதாக மாநகருடன் சேர்க்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களுக்கு தெருவிளக்குகள் போடுதல், சாலை அபிவிருத்தி செய்தல் போன்றவைகளுக்காக 80 இலட்சம் ரூபாய்; மாநகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால்களை பராமரிப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் 20 இலட்சம் ரூபாய் ; மாநகரிலுள்ள தனியார் தெருக்களில் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க ஒரு கோடி ரூபாய் ; இந்த அடிப்படையில் இந்த 5 கோடி ரூபாயும் செலவிடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியின் புதிய வளர்ச்சிப் பணிகளுக்காக உலக வங்கியிடம் நிதி கோரப்பட்டுள்ளதா ? இதுவரை அவர்கள் கடன் கொடுத்த அனைத்துப் பணிகளுக்கும் வேலை முடிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது எம். எம். டி. ஏ. என்ற அடிப்படையில் மாநகராட்சியின் புறநகர் வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்காக உலகவங்கி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, மாநகராட்சியின் அருகில் இருக்கிற புறநகர் பகுதிகளில் சாதாரண மக்கள் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடைய வசதிக்காக இந்த பணத்தில் எவ்வளவு செலவிடப்படுகிறது ? புறநகர் அபிவிருத்திப் பணிகளுக்காக தனியாக திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

1982 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. புறநகர் அகநகர் என்று இரு பகுதிகள் இருக்கின்றன. சென்னை மாநகர் அகநகர் பகுதி என்றால் அதைச் சுற்றி இருக்கின்ற பகுதிகளை புறநகர் என்று வைத்துக்கொள்ள வேண்டும். புறநகர் சம்பந்தமாக நான் ஏற்கெனவே பதில் சொல்லும்போது சொன்னேன். அது ஊராட்சி ஒன்றியங்களாகத்தான் இருக்க முடியும். அதிலுள்ள 12 பஞ்சாயத்துக்களுக்குத்தான் 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது என்று சொன்னேன். இன்னும் சொல்லப்போனால் மாநகரோடு சேர்க்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு இன்னும் பஞ்சாயத்து வரிதான் போடுகிறார்கள். மாநகராட்சி வரி இன்னும் போட்டு வசூல் செய்யப்படவில்லை. ஆகையால்தான் முதலில் அடிப்படை வசதிகளை செய்ய நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து பின்னால் மாநகர வரி விதித்து வசூல் செய்யலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாநகராட்சி வளர்ச்சிக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நகரில் பல பகுதிகளில் நீண்டகாலமாக சாலைகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கிறது; ட்ரெயினேஜ் ஸ்கீம் சரியாக இல்லை; இதெல்லாம் அமைச்சருக்கும் தெரியும். ஆகையால் இந்த 5 கோடி ரூபாய் போதும் என்று அரசு கருதுகிறதா? 50 கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படும் என்று நான் நேரிலே அமைச்சரிடம் தெரிவித்திருக்கிறேன். அமைச்சரவர்களும் பார்த்திருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது இந்தத் தொகையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்போது கூட நிதிநிலை அறிக்கையில் இந்த மாநகராட்சிக்கு வடிகால் போடுவதற்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதனுடைய வேலைகள் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறோம். அவர்கள் சொல்வதைப்போல அபிவிருத்திப்பணிகளுக்கு இந்த 5 கோடி ரூபாய் கண்டிப்பாக போதாது. மேலும் 35 இலட்சம் ஜனத்தொகையும் வந்துபோகின்றவர்களுடைய தொகை 10 இலட்சத்தையும் சேர்த்து இந்த 45 இலட்சம் ஜனத்தொகையைக்கொண்ட மாநகராட்சியில் அபிவிருத்திப் பணிகளுக்கு 20 கோடி ரூபாய் செலவழித்தால் கூட போதாது. 50 கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால்தான் நகரை சுத்தமாக, சுகாதாரமாக வைத்து, எல்லோருக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். ஆகையால் புதிய வரிகளைப் போடாமல், ஆனால் வசதிகளைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்

படையில் செயல்படுகிறோம். இருந்தாலும் கூட இன்றைக்கு சேல்ஸ்டாக்ஸ், சர்சார்ஜ் வகையில் சுமார் 4 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கத்திலிருந்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 5 கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த முறையிலேதான் நாம் மாநகராட்சிப் பணிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்துகள் விற்பனை

*வினா எண். 390—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்துகளை விற்க ஒரு சில மருந்துக்கடைகளுக்கு மட்டுமே அரசு அனுமதியளித்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9·30]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் குழந்தைகளைக் கடுமையாகத் தாக்குகின்ற காரணத்தால் இந்த இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்துகளை இலவசமாக ஊர் ஊருக்குச் சென்று கொடுப்பதற்கு ஒரு மருத்துவக் குழுவை அரசாங்கம் அனுப்புமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இப்போது கூட இலவசமாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழகத்திற்கு மொத்தம் 50 இலட்சகு டோஸஸ் தேவைப்படுகிறது. ஆனால் இப்போது நமக்கு கிடைக்கக்கூடிய டோஸஸ் 9 இலட்சம்தான். இதுதான் இருக்கக்கூடிய பிரச்சினை. நமக்குக் கிடைப்பதிலே ஏறத்தாழ 90 சதவீதம் இலவசமாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 10 சதவீதம்தான் கடைகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுடைய (Institute of Child Health